RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1622

# பெரம்பலூர் மாவட்டக் கோயில்களில் நடைபெறும் தெருக்கூத்தும் அதன் தாக்கமும்

**கோ. சுப்பிரமணியன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, ஹேன்ஸ் ரோவர் கல்லூரி பெரம்பலூர்-621212, தமிழ்நாடு, இந்தியா

# Street Dance in Temples of Perambalur District and its Impact

**G. Subramaniyan [a, *]**

[a] Department of Tamil, Thanthai Hans Roever College, Perambalur-621212, Tamil Nadu, India

* Corresponding Author: dgsubramaniyan@gmail.com

Received: 10-06-2022
Revised: 13-09-2022
Accepted: 02-10-2022
Published: 12-12-2022

Check for updates

## ABSTRACT

Developing a rural area is good for a city. Villages are places where civilization and culture are recreated. The family members feel happy and proud when close relatives visit their house. The villagers keep praying to the gods to protect the happiness of their family. During the worship people of various ethnicities unite and they organize many programs. Various cultural arts events and games are performed in these festivals. Artists participates and show off their skills in the events. At these times artists are given gifts and appreciation. Thus, the street dancers receive friendship and love from the audience as they express their artistic skills with various techniques. Although there are many events that can happen during the festival season, the one event that can impress the audience are street dance. The narrative element of the story acts as a bridge between the performers and the audience. The plot of the story is about the glory of the ancient leaders and the history of the deities. All these performances are done with the hope that it will influence the minds of the country people and guide them in their lives.

**Keywords:** Street Dance, Folk Dance, Perambalur, Dances Performed in Temples.

## முன்னுரை

பார்வையாளர்களைக் கவராதக் கலை ஒரு போதும் வெற்றி காண்பதில்லை. அவ்வகையில் தெருக்கூத்துக்கலை பார்வையாளர்களைத் தன்வசப்படுத்துகிறது. தெருக்கூத்தின் தாக்கம் மக்களின் வாழ்வில் பிரதிபலிக்கிறது. கூத்தில் நடிப்பவர்கள் அவ்வூரினைச் சார்ந்தவர்கள் என்பதும் அவர்களுக்கு நன்கு பரிச்சயமானவர்கள் என்பதும் இதன் சிறப்பாக அமைகின்றது. மேலும் தெருக்கூத்துகள் சில கிராமங்களில் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறுவதுண்டு. இது பாரதக்கதை நடத்தும் திரௌபதியம்மன் திருவிழாவின் ஒரு பகுதியாக அமைகின்றது. இதனால் பாரதம் பாடுபவர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் தொடர்பு மிகுதியாகின்றது. பாரதக்கதையில் கூறப்படுகின்ற அறக்கருத்துகளுக்கு மக்கள் மிகுந்த மதிப்பளிக்கின்றனர். தெருக்கூத்தின் சில காட்சிகளில் கதாப்பாத்திரங்களே தங்கள் முன்பு தோன்றியதாக நம்பிக்கைக் கொள்கின்றனர். இதனால் காட்சிகளுக்கேற்ற தாக்கங்கள் மக்களிடையே நிலை கொள்கின்றன (சில நேரங்களில் மிகவும் பயம் கலந்த கதைகள் வரும் போது அதைக் கேட்டுப் பார்வையாளர்கள் பாதிப்புக்கு உள்ளாவதும் உண்டு). இவ்வாறான நிகழ்வுகளை ஆராய்வதாக அமைகின்றது.

## உறவை வளர்க்கும் கூத்துக் கலைஞர்கள்

நேர்த்திக் கடனுக்காக நடத்தப்பெறும் கூத்துகளிலும் மக்கள் உணர்வொன்றி ஈடுபடுவர். தங்களையும் கூத்துகளில்இணைத்துக கொண்டுசெயல்படுவர். கூத்தர்களுக்குவேண்டிய பொருட்களைக் கூத்தரங்குகளில் (Maruthadurai, 1999). மேடையில் சென்று கொடுக்கும் போதும் நடிகர்களின் நடிப்பினைப் பாராட்டி அன்பளிப்புகளைக் கொடுக்கின்ற போதும் பார்வையாளர்கள் தங்களைக் கூத்துக் கலையோடு மறைமுகமாக இணைத்துக் கொள்கின்றனர். அதுமட்டும் அல்லாது அப்பாத்திரங்களையும் நடிப்பினையும் பார்த்து மனதைப் பறிக்கொடுத்த நிலையில் அவ்வேடங்களைத் தாங்களே ஏற்று நடிப்பதும் கூத்துக்கலையின் சிறப்பாகும். மேலும் நேர்த்திக் கடனுக்காக நடக்கக்கூடிய கலையானக் கூத்து குழந்தை இல்லாதவர் வேண்டி, பின் குழந்தை பிறந்தவுடன் அப்பாத்திரங்களை ஏற்று நேர்த்திக் கடனைச் செய்து முடிப்பதும் இக்கூத்துக் கலையின் சிறப்பாக அமைகின்றது.

நாட்டுப்புறக் கலைகள் அனைத்தும் வேளாண்மைப் பணிகள் நிறைவடைந்த வேளையிலே நடத்தப் பெறுகின்றன. அதனால் வயல் வேலையின் போது ஏற்பட்ட களைப்பினைப் போக்க வேண்டி இரவு நேரங்களில் இவ்வாறான கலைகளில் மனது ஒன்றியவாறு கண்டு மகிழ்கின்றனர். தெருக்கூத்துக்கலையைப் பாமர மக்களும் உழைக்கக்கூடிய உழவர்களும், சின்னஞ்சிறார்களும், பெரியவர்களும், தாய்மார்களும் கொட்டும் பனியிலும் குளிரிலும் கலையுணர்வோடு விரும்பிக் கண்டுகளிக்கின்றார்கள். இதில் பல நீதிகளைக் கற்றுக் கொள்கிறார்கள். கிராம மக்கள் காசு செலவு செய்யாது கண்டு களிக்கும் ஒரு கலையாக அமைவது இத்தெருக்கூத்து சிறப்பாகும். இது போன்று நாட்டுப்புறக் கலைகள் அனைத்தும் கிராம மக்களைக் கவர்ந்துவிடுகிறது. தெருக்கூத்து மேடையிட்ட இடங்களிலும் தென்னை ஓலையால் வேயப்பட்ட கொட்டகைகளுக்கு முன்பாகவும் நிகழ்த்தப்படுகிறது (Arivu Nambi, 1986). இவ்வாறு தெருக்கூத்துப் பார்க்கின்ற வேலையில் உடல் களைப்பையும், மனச்சோர்வையும் போக்கிக்கொள்ள ஏதுவாக அமைவதே அதன் மற்றொரு சிறப்பாகும்.

தெருக்கூத்தின் சிறப்பிற்கும் பார்வையாளர்களின் கவன ஈர்ப்பிற்கும் முதற்காரணம் கூத்தர்களின் நடிப்பும் பேச்சுமாகும். இதில் ஆடல்கள் இல்லாத இன்றைய மேடை நாடகங்களைப் போல இல்லாமல் ஆடல்களாகவே அமைகிறது. இது இசையாலும் ஆடல்களாலும் உருவான கிராமியக் கலை என்பதாலும் மக்களைக் கவர்கின்றது. மேலும் இத்தெருக்கூத்து அதன் பெயரே அறிவிக்குமாறு நாடக அரங்கு இல்லாமல் தெருக்களில் வெட்ட வெளியில் நடிக்கப்பட்டு வருவதாலும் மேடை அலங்காரங்கள் இன்றி தெருக்களில் ஆடலும் பாடலுமாக நடத்தப்பெறுவதாலும் இதனைக் கண்டு மகிழ்வர். இவ்வாறு நவீனமயமானக் காலத்தில் எளிமையாக ஒரு சிறந்த கருத்துக்களுடன் ஆடலையும் கண்டு மகிழ்வது தெருக்கூத்திற்குரிய சிறப்பாகும் என்பதை இதன் மூலம் அறியலாம் (Arivu Nambi, 1986).

"கற்றலின் கேட்டலே நன்று" என்பது போன்று ஒரு நிகழ்வை நேரில் கண்டும், கேட்டும் களிப்பதில் நாட்டுப்புற மக்கள் பெருமகிழ்வடைகின்றனர். இவ்வாறு ஒருவர் பெற்ற மகிழ்வைத் தங்களுடைய உறவினர்களுக்கும் அம்மகிழ்வை பெற வைப்பதே தெருக்கூத்தின் சிறப்பாகும். ஆறு மாதம் கேட்டுத் தெரிந்துக்கொள்ள வேண்டியதை ஒரு நாள் நாடகம் மூலம் பார்த்துத் தெரிந்துக் கொள்ளலாம், இதனைப் போன்றே கூத்துக் கலை ஒரு நாள் பார்த்தவுடன் மக்கள் அதில் மனம் ஈர்க்கப்பட்டு தொடர்ந்து பல இரவுகளில் நடத்தும்படியாகத் தெருக்கூத்தினை ஏற்பாடு செய்கின்றனர். இது தெருக்கூத்தினுக்கு கிடைத்த மற்றுமொரு சிறப்பாக அமைகின்றது. இவ்வாறு ஒரு நாள் பார்வையாளர்களின் மனதை ஈர்த்துவிட்டால் அத்துடன் அதனை விட்டுவிடுவதில்லை. அதனை மீண்டும் மீண்டும் கண்டு மகிழ்வதே தெருக்கூத்தின் சிறப்பாக அமைகின்றது (Muthushanmugam, 2016). இவ்வாறு காண்பது பார்வையாளர்களிடையே சலிப்பை ஏற்படுத்தாமல் மாறாகத் தாக்கத்தினை ஏற்படுத்தி மீண்டும் காணவேண்டிய ஆவலை ஏற்படுத்துகின்றது.

## ஒற்றுமை காக்கும் கூத்துகள்

தெருக்கூத்தின் தொடக்கநிலையில் தீபாராதனைக் காண்பிக்கப்படுகின்றது. இது ஒவ்வொரு நாளும் கூத்துத் தொடங்குவதற்கு முன்னதாக நடக்கும். இதில் அனைத்துத் தரப்பு மக்களும் சாதி மத

வேறுபாடின்றி கலந்து கொள்கின்றனர். பின்னர் கூத்துத் தொடங்கி நடக்கும் போது அனைத்து மதத்தினரும் ஒற்றுமையுடன் அமர்ந்து கூத்து நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்கின்றனர். பொதுவாக இந்துக் கோயில்களில் பிராமணர்களே பூசை செய்வர். இவ்வாறான நிலையில் திரௌபதியம்மன் கோயில்களில் பிராமணரல்லாத பிற சாதியினரே பூசாரியாக உள்ளனர். அதிலும் குறிப்பாகத் தென்னாற்காடு மாவட்டத்தில் கோயில் பூசாரிகளாக அனைத்துப் பகுதியிலும் வன்னியர்களைச் சேர்ந்த பிரிவினரே இருக்கிறார்கள். இப்பகுதியில் வன்னியர்கள் அதிகம். அதனால் பிராமணர்கள் இக்கோயில் விழாக்களில் பங்கேற்பதில்லை.

அம்மனும் தர்மராஜாவும் ஊர்வலம் வரும் போது கூட அவர்கள் தெய்வத்திற்குப் பூசை நடத்துவதில்லை. இது இப்பகுதியில் காணப்படும் பிராமணரல்லாத மற்ற இனத்தவர்களின் ஒற்றுமையினையும் சிறப்பையும் காட்டுவதாக அமைகின்றது (Thulasi, Ramasamy, 1988). இது தெருக்கூத்தில் பார்வையாளர்களிடையே ஏற்பட்ட தாக்கத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் புதுவேட்டக்குடியைச் சுற்றியுள்ளப் பகுதியில் வன்னியர், உடையார் சமூகத்தினர் பூசாரியாக உள்ளனர். இது ஒரு பகுதியில் வசிக்கக்கூடிய மக்களின் நிலையைப் பொறுத்து அமைகின்றது என்பதைக் கள ஆய்வில் காணமுடிகின்றது.

## பார்வையாளர்களும் கூத்தும்

நேர்த்திக் கடனுக்காகப் பல்வேறு வகையான சடங்குகளை நாட்டுப்புற மக்கள் நடத்துகின்றனர். அதில் ஒன்றாகக் கூத்தும் நடத்தப்படுகின்றது. அவ்வகையில் தெருக்கூத்து நடத்தும் மக்கள் கோயில் முன்பாகவும் அல்லது ஊரின் மையப் பகுதியிலும் நடத்துவதுண்டு. சில வசதியானவர்கள் அவர்களது முழுச் செலவில் நடத்துவர் என்பதால், கோயில் முன்போ, பொது மன்றங்களிலோ கூத்தை நடத்த விரும்புவரின் வீட்டு வாசலிலோ நேர்த்திக் கடனுக்குரியக் கூத்தினை நடத்துவர். இவ்வகையில் நடத்தப்பெறுகின்றக் கூத்துக்கலையும் பொதுமக்கள் தனித்த ஒருவரின் செலவு என்பதால், வெறுப்படையாமல் கூத்துக்கருவின் முக்கியத்திற்காகக் கூத்துக்கலையினைக் கண்டு மகிழ்கின்றனர் (Maruthadurai, 1999). நேர்த்திக் கடனுக்கென்று நடத்தப் பல கலைகள் இருந்த போதும் தெருக்கூத்துக் கலையானது பாதிக்கப்பட்டவரின் வாழ்க்கை நிலையினைப் பிரதிபலிப்பது போன்றக் கதைகளைத் தேர்ந்தெடுத்து நடத்துவதால் சமூக மாற்றங்களுக்கும், மகிழ்விற்கும் தெருக்கூத்துக்கள் வழிவகுக்கின்றன.

நேர்த்திக் கடனுக்காக நடத்தப் பெறுகின்ற கலைகள் நகைச்சுவையையும், பொழுதுபோக்கையும் கொண்டமைகிறது. இவ்வாறு நடக்கின்ற கலைகளிலும் பார்வையாளர்கள் மனம் ஒன்றிய நிலையில் ரசிக்கின்றனர். இவ்வாறான நிகழ்வு பார்வையாளரிடையே பெரிய அளவில் மாற்றத்தினை ஏற்படுத்தி விடுகின்றது. கூத்து என்ற வகையில் நாடகமாகவும் பாட்டுடன் இணைந்த கூத்தாகவோ அமையலாம். வேடப் புனைவுடனோ வேடப் புனைவு இல்லாமலோ கூத்துக்கள் நடை பெறும். இக்கூத்துக்கள் பெரும்பாலும் விழாவின் கூறாகவே அமைகின்றன. சில சூழல்களில் நேர்த்திக் கடனுக்காகவும் நடத்தப் பெறுகின்றன என்று அரு. மருததுரை தமது நூலில் கூறுகின்றார். இவ்வாறு நடத்தப்பெறுகின்ற கலையில் ஏற்பாட்டாளரைக் காட்டிலும் பார்வையாளர்கள் அதிகத் தாக்கத்திற்கு ஏதுவாகின்றனர் என்பதையும் அறிய முடிகின்றது.

## தெருக்கூத்தும் நாட்டுப்புற மக்களும்

நாட்டுப்புறக் கலைகளின் பிறப்பிடமே கிரமமாகும். இக்கிராம மக்களே தங்களது வாழ்வைச் செம்மையாக்கிக் கொள்வதற்காகப் பல்வேறு பணிகளில் ஈடுபடுகின்றனர். இவ்வேலையின் சலிப்பும் அலுப்பும் தெரியாமல் இருக்க பாடல்கள் பாடி மகிழ்வதுண்டு. கிராமத்தில் வயல் வேலைகளில் ஈடுபடுகின்ற கூலியாட்கள் வாழ்கிறார்கள். சமூகத்தின் அடித்தளத்தில் உள்ள இவர்கள் காலை முதல் மாலை வரை ஆண் பெண் இருபாலரும் வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களின் வாயொலியே நாட்டுப்புறப் பாடல்களாக மிளிர்கின்றன. இப்பாடல்களின் துணையோடு கூத்துக்களும் நடக்கின்றது

என்றால் அது மிகையாகாது. தெருக்கூத்தின் பாடல்களைக் கேட்டு மகிழ்வதற்கென்றே ஒரு கூட்டம் இன்றையக் காலத்திலும் உண்டு. அதுவும் கட்டியங்காரன் பாடுகின்ற போது,

"ஐயா வந்தனமாம் வந்தனம்

வந்தவங்கக் குந்தனும்.

வாசமுள்ள சந்தனம் நீங்க

வாரி வாரி பூசனும்"

என்று பாடுகின்றான் (Arokianathan, 1975). கட்டியங்காரனின் உயர்ந்தக் குரலைக் கேட்டவுடன் தூங்கிக் கொண்டிருப்பவர்கள், தொலை தூரத்தில் இருப்பவர்கள் அனைவரும் வந்து கூடிவிடுகின்றனர். நாட்டுப்புறக் கலைகளில் உள்ள பாடல்களே மக்களை வசியப்படுத்தி விடுகின்றது. அதுவும் தெருக்கூத்தில் பாடுகின்றப் பாடல் மக்களை ஆடலுடன் சென்று தாக்கி வாழ்வில் மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான கூத்துக்கள் நடைபெற்றதற்கான சான்றுகளை நாம் அவ்வப்போது கண்டு வருகின்றோம்.

அதில் இராஜராஜேஸ்வரம் என்னும் தஞ்சைப் பெரிய கோயிலில் இராஜராஜேஸ்வரம் நாடகம் ஆண்டுதோறும் வைகாசித் திருவிழாவில் நடைப்பெற்று வருவதற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது பற்றி ஒரு கல்வெட்டுச் சான்று உள்ளது. அதில், கோப்பரகேசரிவன்மரான உடையார். ஸ்ரீ ராஜராஜேஸ்வரர் யாண்டு ஆறாவது உடையார் ஸ்ரீ ராஜராஜேஸ்வரமுடையார் கோவிலில் ராஜராஜேஸ்வர நாடகமாட நித்த நெல்லுத்தூணியாக நிவந்தம் செய்த நம்வாய்க்கேழ்விப்படி சாந்திக் கூத்தன் திருவாளன் திருமுதுன்றனை விஜயராஜேந்திர ஆச்சாரியனுக்கும் இவன் வர்க்கத்தார்க்கும் குடுத்தோமென்று ஸ்ரீ காரியக் கண்காணி செய்வார்க்கும் கரணத்தார்களுக்கும் திருவாய்மொழிந்தருளித் திருமந்திரவோலை உத்ரவிடவ்விழப்பறையன் எழுத்தினால்யாண்டு நாலாவது காயநாள் திருமுகம் பிரசாதம் செய்தருளி வந்தமையினும் இவன் காணி அனுபவித்து வருகிறபடியே ஸ்ரீ ராஜராஜேஸ்வரமுடையார் கோயிலிலே கல் நாட்டு வித்துக் குடுக்கவென்று கூறியிருக்கும் செய்தியின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் கூத்துக்கள் தொடர்ந்து நடைபெற்று வந்ததை அறிய முடிகின்றது (Muthushanmugam, 2016). மேலும் தெருக்கூத்தை நடத்தவும், பார்க்கவும் ஒரு கூட்டம் இருந்ததையும் அறிய முடிகின்றது. இவ்வாறு அளிக்கப் பெறுகின்ற கொடைக்குக் கூத்தக்காணி என்றும் வழங்கப் பெறுவதைக் காணமுடிகின்றது.

## தெருக்கூத்து ஏற்படுத்தும் தாக்கம்

நாட்டுப்புறத்தில் நடக்கின்றக் கலைகளினால் மக்கள் பெரியளவில் மாற்றம் பெறுகின்றனர். எடுத்துக்காட்டாகச் சுதந்திரப் போராட்டக் காலத்தில் எழுந்த பாடல்கள் அனைத்தும் மக்களை ஊக்கப்படுத்திச் சுதந்திரத் தாகத்தினை ஏற்படுத்தியதை எவரும் மறுக்க முடியாது. அறிஞர்களால் எழுதப்பட வேண்டிய பாடநூல்கள் அரசியல் சார்பு பெற்றவர்களால் சில நேரங்களில் எழுதப்படுகின்றன. தமிழர்களின் கலைகளும் வாழ்வியலோடு இணைந்து உருவானவை. காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்த முதல் மாந்தர்கள் தங்களின் மகிழ்ச்சி துன்பம் இவற்றை வெளிப்படுத்த ஆடல் பாடல்கள் நிகழ்த்தினர். இவ்வாறு மக்களின் தொழில் சார்ந்து பாடல்களும், கூத்துகளும் வடிவம் பெற்றன. இக்கலைகளின் வளர்ச்சிப் போக்கினைத் தெளிவுபடுத்தும் ஆவணமாகத் தொல்காப்பியம் விளங்குகின்றது. இவ்வாறு இலக்கியங்களும் மக்களின் வாழ்க்கையினை எடுத்துக்கூறும் வகையில் அமைந்திருப்பது தமிழர் நாட்டுப்புறக்கலைகள் பெற்ற பெரும் பேறாகும் (Sentamil Selvi, 1982). இவ்வாறான நிலையில் நாட்டுப்புற மக்கள் கூத்துக்கலையினைக் கண்டும் கேட்டும் தங்கள் வாழ்வைச் செம்மைப் படுத்திக் கொள்கின்றனர். தெருக்கூத்திற்கு இது பெரிய சிறப்பாக அமைகிறது என்பதையும் இதன் வழி அறியமுடிகின்றது.

## தெருக்கூத்தும் நினைவுகளும்

நாட்டுப்புறக் கலைகள் அனைத்தும் அம்மக்களின் எண்ணங்களையும், வாழ்க்கை நிலையினையும் பிரதிபலிக்கும் வகையில் அமைகின்றன. கூத்தில் நடிக்கக் கூடிய நடிகர்களின் நடிப்புத்திறன் அனைவரையும் கவரக்கூடிய நிலையில் உள்ளது. அதனால் பார்வையாளர்களில் ஒருவரே மேடையில் தோன்றி நடித்தாலும் அல்லது தங்களுக்குத் தெரிந்த மனிதர்கள் கூத்தில் நடித்தாலும் அவர்களை அப்பாத்திரமாகவே நினைத்து வணங்குகின்றனர். உதாரணமாக பாரதக்கூத்தின் ஒரு பகுதியான அரவான் களப்பலி என்பதில் அரவானை காளிக்குப் பலியிடும் நிகழ்ச்சி நடித்துக் காட்டப்படுகின்றது. அப்போது கோழியின் ரத்தம் கலந்த சோற்றைக் குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் காளிவேடமிட்டவரின் காலில் விழுந்து வணங்கி வாங்கி உண்ணுகின்றனர்.

நாளடைவில் குழந்தைப்பாக்கியம் கிடைப்பதாகவும் கூறிய செய்திகளை ஆய்வில் அறியமுடிந்தது. இதே போன்று பாத்திரத்தின் மனவோட்டங்களை ஆடல் முறைகள் மூலம் வெளிப்படுத்த வேண்டிய கலையறிவு கூத்தர்களுக்குரியதாகின்றது. மக்களின் உள்ளத்தில் பதியும் வண்ணம் ஆடல் முறைகள் மாறுபட்டிருக்கும். ஒளிந்து மறைந்து கொள்ளையடிக்க வரும் திருடன் கூடக் காலில் சலங்கை கட்டிக் கொண்டு ஆடிப்பாடி ஆர்ப்பாட்டத்தோடு வருவான் இதனால் பார்வையாளர்களுக்கு அப்பாத்திரம் திருடனில்லை என்ற கருத்து தோன்றுவதில்லை. மாறாக அப்பாத்திரம் நடிக்கக்கூடிய நடிப்புத்திறனையும் அவன் கூறுகின்ற வார்த்தைகளையே கேட்டு தங்களையே மறந்து பார்ப்பதையும் நாட்டுப்புறங்களில் இன்றைய இயந்திரக் காலத்திலும் காணமுடிகின்றது (Arivu Nambi, 1986). இவ்வாறு திருடன் சலங்கைக் கட்டிக்கொண்டு வருவதை மக்கள் ஆவலுடன் பார்ப்பதை அறியமுடிகின்றது. மேலும் கூத்து நிகழ்ச்சி நடக்கின்றபோது பல்வேறு வகையானத் துணைக் கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். இது கூத்துப் பாடலுக்கேற்ப நளினப்படுத்த மத்தளம், ஆர்மோனியம் போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறானக் கருவிகளைக் கூத்து நிகழ்ச்சிகள் தொடங்கும் போது சூடம் ஏற்றி காட்டிவிட்டு வாசிக்கத் தொடங்குகின்றனர். மேலும் கூத்து மேடையில் கூத்தர்கள் தோன்றி நடிக்கத் தொடங்கும் போது அவற்றைத் தொட்டு வணங்கிவிட்டு பின்னர் நடிக்கின்றனர். அந்த அளவிற்குக் கூத்தர்களுக்கு அக்கருவிகளில் தெய்வ நம்பிக்கையும் மதிப்பும் உள்ளன.

அதனைப் போன்று கூத்துக்களில் பேசாக் கருவியாக வந்து போகும் சிறப்போடு பூசை செலுத்துதல் எளிய நிகழ்ச்சியென ஒதுக்க முடியாது. பொதுவாகத் திருமணத்திற்கு முன்னால் கொட்டகை போடும் போதும் இதைப் போலவே முகூர்த்தக்கால் நடுதல் என்ற சடங்கு நிகழும் (Arivu Nambi, 1986). இவ்வாறு நடக்கின்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் மக்களின் நினைவில் அது தெய்வத்திற்கே நடத்தக்கூடிய பூசை என்று நம்புகின்றனர். இதையே காலங்காலமாகக் கடைப்பிடித்துக் கொண்டு வருகின்றனர் என்பதையும் பெரம்பலூர் மாவட்டத்தில் நடக்கின்ற கூத்துகளில் காணமுடிகின்றது.

## பார்வையாளர்களின் நம்பிக்கை வெளிப்பாடு

கிராமப்புற மக்களின் வாழ்வில் தெய்வ நம்பிக்கைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. உதாரணமாகப் பெண்கள் உடல்வாகினாலும் உள்ளத்தில் வேறுபட்டாலும் குழந்தைப்பேறு தள்ளிப் போகின்றது. இதனால் ஊரார்களும், உரியவர்களும் பெண்ணை மலடி என்றும், வக்கத்தவள் என்றும் பேசி கேலி செய்கின்றனர். பின்னர் இறைவனது ஆசியினாலும் அவர்கள் நம்பிக்கையாலும் பிற்காலத்தில் குழந்தைப் பாக்கியம் உருவாகிறது. இவ்வாறான நேரத்தில் கூத்துக்களத்தில் வேடத்துடன் நிற்பவரைக் கூத்தாடி என்று நினைக்காமல் அவ்வேடத்திற்குரிய தெய்வங்களாகவே பார்வையாளர்கள் எண்ணுவதை அறியலாம்.

மேலும் குறிப்பாகச் சீதை வேடம் பூண்டவரிடம் லவகுசா பிறப்புக் காட்சி முடிந்தவுடன் தத்தம் குழந்தைகளைக் கொடுத்து வாங்குவதும் அவர் காலில் குழந்தைகளை வைத்து எடுப்பதும், திருநீறு பெறுவதும் அக்கலையின் பக்தியுணர்வைப் பறை சாற்றும் காட்சிகளாகும். வேடதாரிகளைத் தெய்வக்கோலத்தில் காணுங்கால் பார்வையாளர்களிடம் நம்பிக்கைகள் தோன்றுகின்றன. இதன் மூலம்

பார்வையாளர்களுடைய எண்ணங்களும் நம்பிக்கைகளும் நிறைவேறுகின்றது. இது இன்றைய சூழலில் தெருக் கூத்தாக வெளிப்பட்டு நாட்டு மக்களுக்கு வாழ்வில் ஒளியூட்டுவதாக உள்ளது. தெருக்கூத்தில் ஒரு காலத்தில் மக்கள் மிகவும் ஈடுபாட்டுடன் இருந்தனர். பிற்காலத்தில் அது சற்று தொய்வுக்குள்ளானது. தற்காலத்தில் நவீனக்கலைகள் பல வந்து விட்டதால் அவற்றுடன் ஈடாகப் போட்டியிட்டு நடக்க வேண்டிய பலவாறு மாற்றத்தினை ஏற்படுத்தினர். இந்நிலையில் தெருக்கூத்தில் நடிகன் உடனே களத்தில் தோன்றி நடிப்பதில்லை (Arivu Nambi, 1986). ஆனாலும் அவர்களின் வரவிற்காகக் காத்திருப்பது பார்வையாளர்களின் வழக்கமான ஒன்றாகும். அவ்வாறு காலங்கடந்து அவையில் தோன்றினாலும் அவன் கூறும் நல்ல செய்திகளைக் கேட்க வேண்டும் என்ற எண்ணத்தில் நம்பிக்கையுடன் காத்திருப்பர். அப்போது கூத்துக் கலைஞர் திரைக்குள்ளேயிருந்தோ, திரையைப்பிடித்தோ, உலுக்கியோ, உதறியோ ஒரு முகமாகவோ, இருமுகமாகவோ, கரந்துவரல் மூலமாகவோ நிகழ்த்தப்படும் நடிகரின் மேடைத் தோற்றம் அவன் ஏற்கும் நாடக உறுப்பினரின் அடிப்படைக் குண நலன்களைப் பயன்படுத்தி நிற்பதாகும். இதன் மூலம் கூத்து நடிகன் நல்ல திறமையோடும் நல்ல குரல் வளத்தைக் கொண்டு பாடுவார்கள் (Lourdu, 2000). அதற்காக எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் காத்திருந்து கண்டு மகிழ்கின்றதை அறியலாம். மேலும் இச்சூழலில் கூத்தர்களுக்கு அன்பளிப்பும் காணிக்கைகளும் கொடுத்து மகிழ்வதையும் காண முடிகின்றது. கூத்து கலைஞர்கள் இதற்காகவே நல்ல குணத்தையும், நல்ல குரலையும் கொண்டு இருக்க வேண்டும் என்பதை அறிய முடிகின்றது.

## முடிவுரை

தெருக்கூத்தை நடத்துகின்றவர்களும், நடிகர்களும், பார்வையாளர்களும், கேளிக்கை நிகழ்ச்சியாகப் பார்ப்பதில்லை. மாறாக நம்பிக்கைக்குரிய கலையாகவே கருதிப் பார்க்கின்றனர். பொலிவும் பெறுகின்றனர். கூத்துக் கதைக்குரிய பாத்திரங்கள் அடைகின்ற துன்பங்களைக் கண்டு கண்ணீர் வடித்துத் துயரப்பட்டு சோர்வு அடைவது பார்வையாளர்களின் நம்பிக்கையினைக் காட்டுகிறது. கூத்தில் நடிக்கின்ற நடிகர்கள் தங்களுக்குத் தெரிந்தவராக இருந்தாலும், பிடிக்காதவராக இருந்தாலும் குறித்த தெய்வ வேடத்தை ஏற்ற நிலையில் அவர்களிடம் விபூதி பெறுவது, குழந்தையைக் கொடுத்து வாங்குவதினால் சிறப்படையலாம் என்ற எண்ணம் கொண்டுள்ளனர். இதனால் பகையுணர்வு மறைவதைக் காண முடிகின்றது. நாட்டுப்புறத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு வகையான கதைகளைக் கொண்டு கூத்து நடத்துகின்றனர். கலைகள் அனைத்தும் பார்வையாளர்களைத் தாக்கத்திற்கு உள்ளாக்குகின்றன. நாட்டுப்புறத்தில் நடக்கக்கூடிய அனைத்துக் கலைகளும், பார்வையாளர்களின் அல்லது கலைஞர்களின் பயன்பாட்டினைக் கருதியே நடத்தப்படுகின்றன

## References


Arivu Nambi, A. (1986) Tamilagathil Therukuthu Amuthan, New Century Book House, Chennai, India.

Arokianathan, (1975) Ilakkiyasaral, Maniyam Pathippagam, Chidambaram, India.

Lourdu, D. (2000) Naataar Vazhakatrial Sila Adipadaigal, Naataar Vazhakatrial aaivu maiyam, Palaiyangkottai, India.

Maruthadurai, A. (1999) Nattupura Panpattukkurukal, Saradha Pathippagam, Chennai, India.

Muthushanmugam, (2016) Pattum Kuthum, New Century Book House, Chennai, India.

Sentamil Selvi, (1982) Sentamil Selvi Magazine, Chennai, India.

Thulasi, Ramasamy, (1988) Tamil Samuthayamum Nattupurap panpadum, International Institute of Tamil Studies, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License